

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 320

திங்கட்கிழமை
13 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மீண்டும் சூடு பிடிக்கின்றது வெள்ளைக்கொடி விவகாரம்

### ஆதாரம் வெளியிடுவேன் என சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 13

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் இடம்பெற்ற உரையாடல்கள் அடங்கிய காணொலி உள்ளது. அதை விரைவில் வெளியிடுவேன் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 11

## குரல் பதிவுகள் வைத்திருந்தால் வெளியிடட்டும் என்றார் நாமல்



கொழும்பு, ஒக்.13

பொன்சேகா வசம் குரல் பதிவுக் காணொலிகள் இருந்தால் அதை அவர் வெளியிடட்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ராஜபக்சக்கள் தொடர்பாக பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துகள் மற்றும் காணொலி வெளியிடும் விவகாரம் என்பன தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் 11

## ஐந்தாம் கட்ட நிதியை வழங்க ஐ.எம்.எப். இரு நிபந்தனைகள்

கொழும்பு, ஒக்.13

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் ஐந்தாவது ஆய்வை நிறைவு செய்து நிதியை விடுவிப்பதற்கு இலங்கை இரு முக்கியமான நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் 11

தட்டுவன்கொட்டியில்

## வெடிப்புச்சம்பவத்தில் காயமடைந்தவர் சாவு

கிளிநொச்சி, ஒக்.13

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டியில் நடந்த வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த சோ.கேதீஸ்வரன் (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் கடந்த மாதம் 29ஆம் திகதி நடந்தது. கைவிடப்பட்ட வீடொன்றில் 11

## செம்மணிப் புதைகுழி வழக்கு இன்று நீதிமன்றில் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக்.13

செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி வழக்கு இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுக்கான 11

## முப்படை ஒத்துழைப்புக் கிட்டினால் போதைக் கடத்தலை ஒடுக்கலாம்

### வடக்கு கடற்படை கட்டளை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

இலங்கைக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படுவதைக் கடற்படையினரால் மட்டும் தடுப்பது இயலாத காரியம். அதற்கு முப்படைகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் புத்திக லியனகமகே தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக் கடற்படைமுகாமில் நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- 11

## பொறுப்புக்கூறல் திட்டத்துக்காக 3.8 மில். டொலர் நிதிக்கோரிக்கை



கொழும்பு, ஒக்.13

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 2027ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்வரை இலங்கையில் பொறுப் 11

## அமைச்சரவை மாற்றம்; வர்த்தமானி வெளியீடு

விரிவு பக்கம்:- 03

## சங்குப்பிட்டி கடலில் மிதந்த இளம்பெண்ணின் சடலம்!

### அடையாளம் காணப்படாத நிலையில் பொலிஸ் விசாரணைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக்.13

சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

கடலில் சடலம் ஒன்று மிதக்கின்றது என்று பூநகரிப் 11



எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு

## மீனவர் அத்துமீறலை கடற்படை தடுக்கிறது!

### வடக்கு கட்டளைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை முடிந்தவரையில் கட்டுப்படுத்துகின்றோம். அவர்களை கைது செய்ய மட்டுமே எம்மால் முடியும். கைது செய்யப்படுவர்களை மேலதிக நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத் 11

## மாகாணத் தேர்தலை மார்ச் நடத்த முயற்சி

### மக்களின் நாடி பிடித்துப் பார்க்க தேர்தலைப் பயன்படுத்த அரசு திட்டம்

கொழும்பு, ஒக்ரோபர் 13

நீண்ட இழுபறியில் உள்ள மாகாணசபைகளுக்கான தேர்தலை அடுத்தாண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எல்லை நிர்ணயப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட 11

முச்சந்தி முரளி

'அனுமர் வால் மாதிரி உந்த வெள்ளைக்கொடி விசயமும் இப்போதைக்கு முடியாது போல'

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4222 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 04 32 42 74 |
| விசேட எழுத்து | O |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1289 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 22 45 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0248 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 4 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2328 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 21 29 46 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5980 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 0 8 4 1 5 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2010 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 38 46 54 67 |
| விசேட எழுத்து | E |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0555 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 5 0 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 12.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0096 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 06 36 51 |

# வெலிக்கடைச் சிறையில் தமிழர் படுகொலை ஒரு வாரத்துக்கு முன்பே திட்டமிடப்பட்டது

## சிங்கள எழுத்தாளர் யாழில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.13**

**1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் 53 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை சிறையில் ஏற்பட்ட கலவரம் அல்ல. சிறைக்கு வெளியில் ஒரு வாரத்துக்கு முன் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஆட்சியின் திட்டமிட்ட படு கொலையே எனச் சிங்கள எழுத்தாளரும் முன்னாள் ஊடகவியலாளருமான நந்தன வீர ரட்ன தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் தந்தை செல்வா நினைவு அரங்கில் இடம் பெற்ற 'கறுப்பு ஜூலையின் 7 நாள்கள்' என்ற நூல் வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊடகவியலாளராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தேன். வடக்கு மாகாணம் இலங்கை இராணுவத்தின் பிடியிலும் இந்திய அமைதிப் படையின் பிடியிலும் , விடுதலைப் புலிகளின் பிடியிலும் இருந்த போது அறிக்கை இடுவதற்காக யாழ்ப்பாணம் வருகைதந்தேன்.

அன்றைய நாள்கள் தெற்கு ஊடகத் தணிக்கைகள் காரணமாக தமிழ் பேசும் மக்களின் உண்மையான தகவல்கள் தெற்கில் திரிவுபடுத்தப் பட்டு வந்தது.

அதற்காகவே 2013 ஆம் ஆண்டு 'யாழ்ப்பாணத் தீயிடல்' என்ற நூலை சிங்கள மொழியில் புலனாய்வு அறிக்கையிடல் மூலம் எழுதினேன்.

இதை ஏன் நான் சிங்களமொழியில் எழுதினேன் என்றால் யாழ்ப்பாணப் பொதுநூலகம் ஏன் எரிக்கப்பட்டது யாரால் எரிக்கப்பட்டது என்ற உண்மை நான் புத்தகம் எழுதும்வரை பலருக்குத் தெரியாது.

தற்போது 'கறுப்பு ஜூலையில் ஏழு நாள்கள்' என்ற நூலை யாழ்ப்பாணத்தில் இரண்டு மொழிகளிலும் வெளியிட்டுள்ளேன்.

1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் கைதிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடுதான் குட்டிமணி உட்பட 53 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமைக்குக் காரணமென அநேகமானவர்கள் இன்றும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மை அதுவல்ல. நான் அக் காலப் பகுதியில் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பிரதம சிறைக் காவலரை நேரடியாகச் சந்தித்து வாக்குமூலம் பெற்றேன். வெலிக்கடைச் சிறைச்சாலையில் குட்டிமணி உட்பட 53 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமை சிறையில் ஏற்பட்ட கலவரம் அல்ல ஒரு வாரத்துக்கு முன்னதாக நன்கு திட்டமிட்ட கொலை முயற்சி.

தமிழ் ஊடகம் ஒன்று கொழும்புக்கு வெளியில் சுயாதீனமான செய்திகளை வெளியிட்டு வந்ததால் அதனையும் தீயிட்டு கொளுத்தினர்.

இந்த உண்மைகளை நான் ஆராய்ந்து வைத்திருந்தநிலையில் பொது வெளியில் எழுதுவதற்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் எனக்கு 40 வருடங்கள் தேவைப்பட்டன.

ஆகவே இனியாவது இந்த உண்மைகள் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தெரியவேண்டும் என்ற நோக்கத்துக்காக தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த நூலை இரு மொழிகளிலும் வெளியிட்டு வைக்கிறேன்- என்றார். (ச-20)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0688 | | |
| ஆங்கில எழுத்து | N | வெற்றி இலக்கம் | 8 1 4 1 7 0 |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2954 | ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 02 04 48 55 | | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G | வெற்றி இலக்கம் | 09 32 33 39 |
| வெற்றி வாரம் | 5015 | | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0790 | வெற்றி இலக்கம் | 09 10 38 |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| கன்னி | | வெற்றி இலக்கம் | 01 07 21 39 |
| சீட்டிழுப்பு வாரம் | 4666 | | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K | சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கம் | 27 49 65 70 | வெற்றி வாரம் | 2130 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 12.10.2025 | தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U | வெற்றி இலக்கம் | 01 13 37 49 |
| வெற்றி வாரம் | 2780 | | |

# உள்வீட்டுப் பூசல்களாலேயே அமைச்சரவையில் மாற்றம்

## மொட்டுக்கட்சி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.13

எந்தவொரு அரசாங்கத்தினதும் முதலாவது அமைச்சரவை மாற்றம் என்பது ஆளுங்கட்சிக்குள் நிலவும் உள்முரண்பாடுகளின் வெளிப்பாடாகும். இந்த அரசுக்கும் அதற்கு விதிவிலக்கல்ல என்று மொட்டுக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. இதுதொடர்பில் பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவிக்கையில்,

அரசாங்கம் மறுத்தாலும் துறைமுகத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட சம்பவம் காரணமாகவே பிமல் ரத்நாயக்கவிடம் இருந்து அமைச்சுப் பொறுப்பு பறிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் முழுப்பொறுப்பையும் பிமலின் தலையில் சுமத்திவிட்டு ஜனாதிபதி தன்னையும் ஏனையவர்களையும் காப்பாற்றிக்கொள்ள முனைகின்றார்.

இந்தச் சம்பவத்தில் பிமல் ரத்நாயக்க மட்டுமன்றி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் பொறுப்புக்கூறவேண்டியவரே- என்றார். (ச-இ)

# மலையகத்துக்கு எந்த வீடுகளும் உண்மையில் ஒப்படைக்கப்படாது

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.13

மலையக மக்களுக்கு எந்த வீடுகளும் உண்மையில் ஒப்படைக்கப்படாது. வீட்டு வசதித் திட்டம் தொடங்கியதிலிருந்து இதுவே வழக்கமான நடைமுறையாக இருந்து வருகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெறவிருக்கும் வீட்டுவசதி கையளிப்பு நிகழ்வு தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையகக் குடும்பங்கள் "எதிர்காலப் பயனாளிகள்" என்று பெயரிடும் ஒரு காகிதத்தைப் பெறுவார்கள். இது சட்டப்பூர்வ உரிமை அந்தஸ்து இல்லாத ஆவணம்.

வீட்டுவசதித்திட்டம் தொடங்கியதிலிருந்து இதுவே வழக்கமான நடைமுறையாக இருந்துவருகிறது. தற்போதைய நிர்வாகத்தின்கீழ் ஒரு வீடுகூடக் கட்டப்படவில்லை, ஒப்படைக்கப்படவில்லை அல்லது முடிக்கப்படவில்லை. இந்தச் செயல்முறையை விளம்பரப்படுத்த இதுபோன்ற ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# மின்கட்டணம் அதிகரித்தால் போராட்டங்கள் வெடிக்கும்

## சஜித் எச்சரிக்கை



கொழும்பு,ஒக்.13

நாட்டில் மின்சாரக்கட்டணம் அதிகரிக்கப்படுமானால், போராட்டங்கள் வெடிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நற்செய்தியொன்றை வழங்கத் தயாராகி வருகின்றது. மீண்டும் மின்சாரக்கட்டணத்தை அதிகரிப்பதுதான் அந்த நற்செய்தியாகும். மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படக்கூடாது என்றே நாம் பிரார்த்திக்கின்றோம்.

அரசாங்கம் ஏதோ ஒருவகையில் மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால், ஐக்கிய மக்கள் சக்தியினரான நாம், மக்களுடன் வீதிக்கு இறங்குவோம்.

மின்சாரக்கட்டணம் அதிகரிக்கப்பட்டால், வீட்டுப்பொருளாதாரத்தில் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவர்.

அரசாங்கத்தின் இந்த மோசமான கொள்கைகளைத் தோற்கடிக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் பணியில் தென்னிலங்கைக் கட்சிகள்

## வடக்கு முதல்வர் வேட்பாளர் தொடர்பில் தே. ம.சக்தி அவதானம்

**கொழும்பு, ஒக்.13**

**மாகாணசபைத் தேர்தலுக்குரிய ஆரம்பக்கட்ட ஏற்பாடுகளை தென்னிலங்கைப் பிரதான கட்சிகள் உள்ளக ரீதியில் முன்னெடுத்துள்ளன.**

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி, வடக்கு- கிழக்கில் களமிறங்கவுள்ள தமது கட்சியின் முதல்வர் வேட்பாளர்கள் பற்றி அவதானம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு முதல்வர் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிமல் ரத்நாயக்க அண்மையில் யாழ். வந்தபோதுகூட இது சம்பந்தமாக இராமலிங்கம் சந்திரசேகரிடம் கலந்துரையாடியுள்ளார் என அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக்கட்சியின் முன்னாள் எம்.பி.க்கள் பலர், மாகாணசபைத் தேர்தலில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபைத் தேர்தல்களில் களமிறங்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகி மாகாணசபை முதல்வர் வேட்பாளராகக் களமிறங்கத் திட்டமிட்டுள்ளனர்.

இதுபற்றிக் கட்சித் தலைவருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர் என அறியமுடிகின்றது. கடந்த பொதுத்தேர்தலில் பெருமளவான எம்.பி.க்கள் தோற்கடிக்கப்பட்டதால் மாகாணசபைத் தேர்தலில் அதிகளவான முன்னாள் எம்.பி.க்கள் போட்டியிடக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ச-44)



# முட்டை விலை 10 ரூபாவால் குறைப்பு

கொழும்பு,ஒக்.13

உள்நாட்டுச் சந்தையில் முட்டை விலையை 10 ரூபாவால் குறைக்க முடிவெடுத்துள்ளதாக சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் நவோத் சம்பத் பண்டார அறிவித்துள்ளார்.

பெரிய அளவிலான முட்டை உற்பத்தியாளர்களின் ஏகபோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், முட்டைக்கான தேவை அண்மையில் குறைந்துள்ளதாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பண்ணையில் வெள்ளை முட்டையின் மொத்த விற்பனை விலை 18 ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் மொத்த விற்பனை விலை 20 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


# உலக சுகாதார அமைப்பின் தலைவர் இலங்கை வருகை

கொழும்பு,ஒக்.13

உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேஸஸ் இலங்கைக்கு நேற்று வருகைதந்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தென்கிழக்கு ஆசிய பிராந்தியக் குழுவின் 78 ஆவது அமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக அவர் வருகைதந்துள்ளார்.

இந்த மாநாடு இன்று 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. மாநாட்டில் தென்கிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளின் சுகாதார அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-இ)



# அமைச்சரவை மாற்றம்; வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,ஒக்.13

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் தொடர்பான வர்த்தமானி நேற்றுமுன்தினம் இரவு வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ்.குமாநாயக்க இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் திருத்தத்தின்படி மூன்று அமைச்சர்கள் மற்றும் 10 பிரதி அமைச்சர்களுக்கான பதவிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நிர்ணயிக்கப்பட்ட விலையில் முட்டையை விற்கமுடியாது!

## உற்பத்தியாளர்கள் எதிர்ப்பு

கொழும்பு,ஒக்.13

தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கமைய முட்டைகளை விற்பனை செய்வது சாத்தியமில்லை என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் முட்டையின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது.

அந்த விலைக்கு முட்டையை விற்பனை செய்வதன்மூலம் தமக்கு நட்டம் ஏற்படக்கூடும் என, அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)




# சட்டம் போட்டால் மட்டும் காணுமோ?

என்னதான் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருந்தாலும், அதைத் திட்டம் போட்டு மீறுறவை மீறிக்கொண்டுதான் இருப்பினம். புதிசா உள்ளூராட்சிசபையளில ஆட்சியமைச்சவை தங்கட சபைகளுக்குள்ள நடைமுறைப்படுத்துறதுக்கெண்டு சில நல்ல திட்டங்களை சட்டங்களாக் கொண்டு வருகினம். அந்தத் திட்டங்களை எல்லாரும் பின்பற்றினால், கன பிரச்சினையள் இல்லாமல் போடும். அதைவிடத் தாங்கள் போடுற சட்டதிட்டமெல்லாம் ஒழுங்கா நடக்குதோ எண்டு சபைக்காரரும் கொஞ்சம் கண்காணிச்சாலும் அந்தப் பயத்திலயாவது எல்லாரும் அதுகளைப் பின்பற்றி நடப்பினம். ஆனால் இஞ்ச சபையளில தீர்மானங்களை நிறைவேற்றிப்போட்டு, சபைக்காரரும் அதை மறந்திடுறதால, அடுத்த நாளே அந்தச் சட்டங்களை சனம் மிதிச்சுக் கொண்டுபோகுது.

விடியக்காலமையில பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளையள் போற றோட்டுகளில டிப்பர்கள், ஹன்ரர்கள் போகக்கூடாது எண்டு அநேகமான பிரதேச சபையள் சட்டம் போட்டிருக்கினம். ஏனெண்டால், விடியப்பிறம்தான் கள்ளமண் ஏத்திக்கொண்டு டிப்பர்கள் ஆத்துப்பறந்தபடி கண்டபாட்டுக்கு போறதுகள். அப்பிடி அவசரமாப் போகேக்க எதிரில வாற ஆக்களைப் பற்றி டிப்பர்காரர் யோசிக்கிறேலை. எப்பிடியாவது பொலிஸில மாட்டாமல் கள்ளமண்ணைச் சேரவேண்டிய இடத்தில கொண்டுபோய் பறிக்கிறது மட்டும் தான் அவையின்ர நினைப்பா இருக்கும். அதாலதான் டிப்பரோட கனபேர் விடியப்பிறம் மோதுப்படுறவை. பெரியாக்களே இப்பிடியெண்டால், பள்ளிக்கூடப் பிள்ளையள் அங்க இஞ்ச ஏமலாந்திக் கொண்டு போகேக்க, டிப்பர்கள் சும்மா விடுமோ? பந்தாடிப்போட்டு பறந்திடுங்கள். இப்பிடியான சம்பவங்கள், விபத்துகள் நடக்கக்கூடாது எண்டுதான் பிரதேசசபையள் பள்ளிக்கூடத்துக்கு பிள்ளையள் போற காலமை நேரமும், பள்ளிக்கூடத்தால வீட்டுக்கு பிள்ளையள் வாற மத்தியான நேரமும் டிப்பர்கள் அந்தப் பாதையால போகக்கூடாது எண்டு சட்டம் கொண்டு வந்தவை.

ஆனால் அந்தச்சட்டம் வெறும் பேப்பரில மட்டும் தான் இருக்கு. வழமைமாதிரி பள்ளிக்கூடங்கள் இருக்கிற றோட்டால டிப்பர்கள் உறுமிக்கொண்டு இப்பவும் திரியுதுகள். பள்ளிக்கூடங்களுக்கு முன்னால போக்குவரத்தை ஒழுங்கு பண்றதுக்கெண்டு நிக்கிற பொலிஸ்காரர்கூட அந்த டிப்பர்களை மறிக்கமாட்டினம். ரண்டு மூண்டுதரம் அப்பிடி பள்ளிக்கூட நேரத்தில ஓடுற டிப்பர்களை மறிச்சு, தண்டம் போட்டால் பிறகு அவை அந்தப் பக்கமே தலைவைச்சுப் படுக்கமாட்டினம். ஆனால் அப்பிடியான நல்லவேலையளை பொலிஸ்காரர் ஏனோ செய்யிறேலை. அதோட பள்ளிக்கூட டியூட்டியில நிக்கிற பொலிஸ்காரர் தங்களைக் கலைச்சுப் பிடிக்க வரமாட்டினம் எண்ட தைரியத்தில வேணுமெண்டு அந்த நேரத்திலதான், கள்ளமண்ணை சுகமாக் கடத்திக்கொண்டு போகினம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் -மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ள தால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோ தரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக் கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். புதிய நண்பர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாய மும் கிடைக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் செலவுகளுக்கு வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டியிருக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி கரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோச னையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கி யத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளை களால் பெருமை உண்டாகும். அவர்களின் விருப்பங்களைப் பூர்த்திசெய்வீர்கள். சகோதரர் களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரிய மும் அதிகரிக்கும். கணவன் - மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். மாலையில் பிள்ளைகள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.



# பரதநாட்டியமாடிய 90 வயது மூதாட்டி

யாழ்ப்பாணம் ஒக்.13

90 வயதுடைய பூரணசிங்கம் மீனாட்சி என்ற மூதாட்டியின் பரத நாட்டிய நிகழ்வு யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப்பதி முரு கன் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் சிறப்புற இடம்பெற் றது. 73 வருடங்கள் கலைப்பணி யில் ஈடுபட்டுவரும் ஓய்வுநிலை நடன ஆசிரியரான இவர் முன்னர் கிளிநொச்சியில் இலவச தனியார் பாடசாலையில் மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவித்துவந்தார். இவர் பரதம், கதகளி, மணிப்புரி, குச்சிப்புடி, கண்டியநடனம் ஆகிய வற்றை முறைப்படி கற்றுத் தேறிய வர்.

1953ஆம் ஆண்டு எலிசபெத் மகாரணியின் இலங்கை விஜயத் தின்போது அவர் முன்னிலையில் நடனமாடியிருந்தார். இவரது ஆவணங்கள் அனைத்தும் போரின்போது அழிவடைந்து விட்டதால் இவருக்கான அங்கீ காரங்கள் எவையும் கிடைக்கவில்லை என்று கூறப்ப டுகின்றது. (ச-40)

# வீட்டிலிருந்த பணம் மாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

கடனை மீளச்செலுத்த வீட்டில் வைத்திருந்த 3 இலட்சம் ரூபா பணம் காணாமற்போயுள்ள தாக வீட்டின் உரிமையாளரால் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை அளவெட்டி மேற்கு காட்டுப் புலம் பகுதியில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம் பெற்றது. வீட்டின் உரிமையா ளர் பணத்தை அறைக்குள் வைத்துவிட்டு, தனது மோட்டார் சைக்கிளைத் திருத்துவதற்காக சங்கானை சென்று, மீண்டும் வந்துபார்த்தபோது பணம்காணா மற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்ப ட்டுள்ளது. (சு-63)





# தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல் யாழ்.மாணவிகளுக்கு வெள்ளி!

கொழும்பு, ஒக்.13

தேசியமட்ட பாடசாலைகளுக்கிடை யிலான 18 வயது பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி எஸ்.சகானா மற்றும் யாழ்.விக்ரோ ரியாக் கல்லூரி மாணவி கு.வைஸ் ணவி ஆகியோர் சாதனை படைத் துள்ளனர். இருவரும் 18 வயது பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் 2.60 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களைத் தமதாக்கிக்கொண்டனர். இந்தத் தட களப்போட்டி கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ச விளையாட்டரங் கில் கடந்த சனிக்கிழமை நடைபெற் றது. (ச-25)



# கலட்டி அம்மன் வீதி சீரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ். மாநகரசபையின் 2ஆம் வட்டாரம், கலட்டி அம்மன் வீதிப் புனரமைப்புப்பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப் பட்டன. யாழ். மாநகரசபையின் முதல்வர் வி.மதிவதனி வைபவ ரீதியாக புனரமைப்புப்பணி களை ஆரம்பித்துவைத்தார். இதில் வடமாகாண மகளிர் விவ கார அமைச்சின் செயலாளர் நந்தகோபாலன், யாழ். மாநகர சபையின் பிரதிமேயர் இ.தயா ளன், 2ஆம் வட்டார உறுப்பி னர் ப. தர்சானந் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)

# விபத்தில் இளைஞர்கள் இருவர் பலி

கொழும்பு,ஒக்.13

நாரம்மலப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். லொறியொன்று கட்டுப்பாட்டை இழந்து, தொலைபேசிக் கம்பத்துடன் மோதி வீதியை விட்டுவிலகி யதில் விபத்து சம்பவித்தது. இதில் லொறியின் பின்னால் பயணித்த இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 26 மற்றும் 29 வய துடையவர்கள் எனவும், அவர்கள் இருவரும் வவுனியா மற்றும் நெடுங்கே ணியைச் சேர்ந்தவர்கள் எனவும் அடை யாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய் யப்பட்டு, பொலிஸாரால் மேலதிக விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின் றன. (ச-இ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

புத்திசாலித்தனத்தின் அளவுகோல் மாறும் திறனாகும்.


அல்பேர்ட் ஐன்ஸ்டைன்

# வழித்தேங்காயை எடுத்து...!

முட்டையின் விலையை அண்ணளவாகப் பத்து ரூபாவால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்திருக்கின்றது. நாட்டில் முட்டை மாபியாவின் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்றும், அதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பின் தலைவர் நவோத் சம்பத் பண்டார கூறியிருக்கின்றார். இதைத்தான், 'வழித்தேங்காயை எடுத்துப் பிள்ளையாருக்கு உடைத்த கதை' என்று எம் முன்னோர்கள் கூறிவைத்தனர். சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அறிவிப்பு, பொதுமக்களின் மனங்களைக் குளிர்விக்கும் ஒன்றாகவே அமைந்திருக்கும். ஆனால், இதன் மறுபக்கத்தையும் நாங்கள் பார்க்கவேண்டுமல்லவா!. ஒரு ரூபாவல்ல, இரண்டு ரூபாவல்ல. அண்ணளவாக 10 ரூபா விலைக்குறைப்பு முட்டைக்குச் செய்யப்படுவதானது, அதன் ஒட்டுமொத்த விலைப்பெறுதியில் 33 விழுக்காடு. குறைந்த பட்சப் பொருளாதாரப் புரிதலும், சாத்தியப்படக்கூடிய சந்தை அறிவும் உள்ள எந்தத் தலைவர்களும் இத்தகைய ஒரு மட் டமான தீர்மானத்தை எடுக்கமாட்டார்கள். இது பண்ணையாளர்களின் பொருளாதாரத்தை - எந்தச் சமரசமும் இல்லாமல் நேரடியாகக் கொன்று புதைப்பதற்கு ஒப்பானது.

முட்டைக்கு விலை குறைக்கப்படத்தான் வேண்டும். அது முறையான நடைமுறையின் கீழ், பொதுவான புரிதல்களின்பாற்பட்டு மேற்கொள்ளப்படவேண்டும். கோழிக் குஞ்சுகளின் விலைகள் குறையவில்லை, தடுப்பு மருந்துகளின் விலைகள் குறையவில்லை, ஊட்டச்சத்துகளின் விலைகள் குறையவில்லை, எல்லாவற்றுக்கும் மேல் தீவனங்களின் விலைகள் குறையவில்லை. இவ்வாறிருக்கையில், முட்டையின் விலையை 33 விழுக்காடு குறைப்பதென்பது எத்தகையசிந்தனையுடன் எடுக்கப்பட்ட முடிவு? எனவே, இந்த நகர்வின் பின்னணியில், 'பண்ணையாளர்களைத் துறையை விட்டே விரட்டிவிட்டு, இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்யும் எத்தனம் உள்ளதா?' என்ற நியாயமான சந்தேகமும் எழவே செய்கின்றது.

கோழிக்குஞ்சுகளின் விலைகள், ஆரம்பகட்டத் தடுப்பூசி என்பவற்றின் விலைகளை விட, தீவனங்களின் விலைகளே பண்ணையாளர்களுக்கு இன்று பெரும் சுமையாக மாறியுள்ளன. அவற்றில் எந்த மாற்றத்தையும் செய்யாமல், வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிப்பது போன்ற முடிவுகளை ஏற்றுக்கொள்ளமுடியாது. எல்லாவற்றுக்கும் மேல், சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவருடைய தீர்மானம் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் நடத்தப்படுவதும் அவசியமாக அமைந்துள்ளது.




# மாகாணசபைத் தேர்தலுக்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துக



## தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு,ஒக்.13

**மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு காரணமல்ல. மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்தவேண்டும் என்ற சட்டம் தற்போது நாட்டில் இல்லை. அதனாலேயே அந்தத் தேர்தல் தாமதப்படுத்தப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்த வேண்டும் என்ற சட்டம் தற்போது நாட்டில் இல்லை. அவ்வாறிருக்கும்போது, தேர்தல்கள் ஆணைக்குழுவால் எவ்வாறு தேர்தலை நடத்தமுடியும்? தேர்தலை அவசரமாக நடத்த வேண்டுமாயின், நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை நிறைவேற்ற வேண்டும். ஆனால் இலங்கையின் தேர்தல்களின் புதிய முன்னேற்றங்கள் தொடர்பில் பேசிவிட்டு மீண்டும் பழைமையான முறைமைக்குச் செல்வது எதற்கு என்பதை சிந்திக்கவேண்டும். மாகாணசபைத் தேர்தலை அவசரமாக நடத்த வேண்டும் என்பதற்காக மீண்டும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை குறித்துப் பேசுகின்றனர். அவ்வாறாயின் கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைஅல்லதுபுதியதேர்தல்முறைமை குறித்து ஏன் பேசவேண்டும்? எனவே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு காரணமல்ல-என்றார். (க-இ)

# களுத்துறையில் துப்பாக்கிச்சூடு

களுத்துறை,ஒக்.13

களுத்துறை - பலாத்தொட்டப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வர்த்தக நிலையம் ஒன்றை இலக்கு வைத்து துப்பாக்கிப்பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். துப்பாக்கிச்சூட்டில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# மின்னல் எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.13

பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு, ஊவா, மத்திய மாகாணங்கள் மற்றும் பொலநறுவை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# துப்பாக்கி ரவைகள் கால்வாயில் மீட்பு

கொழும்பு,ஒக்.13

மதுகம, சிரிகதுர, நாகஹவலப் பகுதியில் உள்ள கால்வாய் அருகே ஒரு தொகைத் துப்பாக்கிரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை விட்டுச் சென்றவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

# வேலைவாய்ப்பு மோசடி; அறிவிக்க இலக்கங்கள்

கொழும்பு,ஒக்.13

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் குறித்து பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிடுவதற்கு 011288 2228 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சிறப்புப் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. இதுவரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சந்தேகநபர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



நாளை
செவ்வாய்க்கிழமை - புரட்டாதி 28
14.10.2025
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் சம்பள உயர்வு

## ஜனாதிபதி உறுதி

கொழும்பு,ஒக்.13

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். வீட்டுப்பயனாளிகளுக்குரிய காணி உரித்துக்குரிய ஆவணம் கையளிக்கும் நிகழ்வு பண்டாரவளையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மலையக மக்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய வழிவகைகள் மற்றும் அவர்களுக்கு நிம்மதியான தொரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் பெரும் கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளது. ஒரு அங்குலமேனும் காணி உரிமை அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குக் காணி உரிமை, வீட்டு உரிமை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதற்குரிய வேலைத்திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படவேண்டும். ஆயிரத்து 750 ரூபா நாளாந்த சம்பளம் வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுவருகின்றது. இவ்வருடத்துக்குள் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிறந்த சுகாதாரசேவைகளை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மக்களுக்குரிய சுகாதாரம் அரசாங்கத்தின் பொறுப்பு. அதனைக் கம்பனிகளிடம் வழங்கத் தயாரில்லை. மலையக மக்களுக்குரிய சமூக அந்தஸ்து, கலாசார உரிமை, அவர்களுக்குரிய அடையாளம் என்பன காக்கப்படும். அனைத்து இன மக்களுக்கும் இது பொருந்தும். மலையக மக்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும் பாகத் திகழ்ந்தனர். அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர். அவர்களுக்கு சம உரிமை உள்ளது-என்றார். (க-44)

# இனப்படுகொலை சாட்சியங்களைப் பாதுகாப்பது சகலரதும் பொறுப்பு

## தவிசாளர் நிரோஷ் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.13
தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான இனப்படுகொலைச் சாட்சியங்களை வரலாறாக்கும் வகையில் நினைவு இடங்களை நாம் பாதுகாப்பது அவசியம். அவற்றைப் பாதுகாப்பதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
செம்மணி என்பது தமிழ் மக்களுக்கு எதிராக எவ்வளவு தூரம் உள்நாட்டில் இனப்படுகொலை நடைபெற்றது என்பதை சர்வதேச அளவில் ஆதாரப்படுத்தி நிற்கின்றது.
தமிழ் மக்கள்மீது வடக்கு- கிழக்கில் அரசால் கட்டவீழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் சாட்சியங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் பல இடங்களில் திட்டமிட்டு மாற்றியமைக்கப்பட்டுவிட்டன. இவற்றில் தமிழ் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும். எமக்கெதிரான அடக்குமுறைகளை ஆவணப்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் நாம் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார். (க-இ)



# புங்குடுதீவு வாணர் கடற்பாலம்; சேதமாக முன் புனரமையுங்கள்



யாழ்ப்பாணம், ஒக்.13
சுமார் ஐந்து கிலோமீற்றர் நீளமான புங்குடுதீவு வாணர் தாம்போதி கடற்பாலம் இருமருங்கும் மோசமாகச் சேதமடைந்து வருகின்றது. இதனைத் தடுத்து புனரமைப்புச் செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
புங்குடுதீவுக்கு மாத்திரமன்றி நயினாதீவு, நெடுந்தீவுப் பிரதேசங்களுக்கும் ஒரேயொரு தரைப் பயணமார்க்கமாக குறித்த பாலம் காணப்படுகின்றது.
இந்தப் பால வீதியால் வருடாந்தம் இலட்சக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன. பாலத்தின் வீதி கடந்த வருட மே மாதம் காப்பெற் இடப்பட்டு திருத்தி நல்லநிலையில் காணப்படுகின்றது. எனினும் வீதியின் இருமருங்குகளும் மோசமாகச் சேதமடைந்துவருகின்றன.
எனவே மாரிகாலம் ஆரம்பிக்க முன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை விரைவாகப் புங்குடுதீவு வாணர் தாம்போதி கடற்பாலத்தின் இருமருங்கையும் திருத்தியமைத்தால் வீதியைப் பாதுகாப்பதுடன் மேலதிக செலவையும் தடுக்கமுடியும் என்றும் தீவகம் சிவில் சமூகம் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-66)


# விளாவெளி இந்து மயானத்தைத் துப்புரவு செய்யக் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஒக்.13
மானிப்பாய் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட விளாவெளி இந்துமயானம் உரிய பராமரிப்பின்றிப் பற்றைகளாகக் காணப்படுகின்றது. மக்களின் பாதுகாப்புக் கருதி மயானத்தைத் துப்புரவு செய்யவேண்டும் என்று மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ கோரிக்கை விடுத் துள்ளார்.
2018ஆம் ஆண்டு மயானத்தை மானிப்பாய் பிரதேசசபை பொறுப்பேற்கவேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, முதற்கட்டமாக மயானம் துப்புரவுசெய்யப்பட்டது. அதன் எரிகொட்டகை, இளைப்பாறு மண்டபப் புனரமைப்பு, மயான எல்லைப்படுத்தல் போன்ற அபிவிருத்திப் பணிகள் செயற்படுத்தப்பட்டன. தற்போது மயானம் உரிய பராமரிப்புகள் இன்றி பற்றைக்காடாக மாறியுள்ளது. எனவே பொதுமக்களின் நன்மை கருதி விளாவெளி இந்துமயானத்தை முழுமையாகத் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளர். (க-27)

# வடக்கு- கிழக்கு அபிவிருத்தி; இந்தியத் தூதுவர் ஆராய்வு

கொழும்பு.ஒக்.13
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தியாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சந்திப்பில் இலங்கையின் அண்மைக்கால அரசியல் மாற்றங்கள், அரசியல் நிலைமைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.
அத்துடன் தமிழ் அரசியற்கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் எதிர்கால நகர்வுகள் தொடர்பில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது. வீடமைப்புத் திட்டங்கள், மீள்குடியேற்றம் மற்றும் போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் ஏனைய சமூக மேம்பாட்டுத்துறைகளில் இந்தியா வழங்கும் உதவிகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துதல் ஆகியவை தொடர்பிலும் ஆராய்ந்தனர். (க-இ)





யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகப் பதவியுயர்வு பெற்ற கைலாயபிள்ளை சிவகரனுக்குக் கொக்குவில் மக்களால் பாராட்டு விழா குளப்பிட்டி மங்களா மகா காளி ஆலய முன்றலில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. விழாவில் வடக்கு மாகாண இளைப்பாறிய பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன், கைலாயபிள்ளை சிவகரனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் சூழல் தண்டம் 8000 ரூபா

யாழ்ப்பாணம், ஒக்.13

டெங்குக் குடம்பிகள் உருவாகும்வகையில் வீட்டுச்சூழலை வைத்திருந்த இரு குடியிருப்பாளர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றில் தலா 8 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி குழுவினால் நடத்தப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது அவை கண்டறியப்பட்டன.

இந்த வழக்கு நீதிமன்றில் அண்மையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குடியிருப்பாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 8 ஆயிரம் ரூபா வீதம் 16 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ச-25,9)



# கனரக வாகனங்களால் சேதமடைகின்றது வீதி

## வேப்பங்குளத்தில் மக்கள் போராட்டம்

வவுனியா, ஒக்.13

ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்குச் செல்லும் வீதியால் தினமும் 60க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் பயணிப்பதால் வீதி, கடும் சேதமடைந்துவருகின்றது. எனவே இந்த வீதியூடான கனரக வாகனங்களின் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கவேண்டும் என்று வலியுறுத்தி அந்தப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் ஓமந்தை வேப்பங்குளம், விளாத்திக்குளம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் வீதியை ஊடறுத்துச் செல்லும் புகையிரதப் பாதைக்கு பாதுகாப்புக்கடவை மற்றும் சமிக்ஞைகள் பொருத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். குறித்த பகுதிக்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடி, இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரியப்படுத்தி தீர்வு பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார். கற்குவாரியின் உரிமையாளர்களை அழைத்து இதுதொடர்பில் ஒரு முடிவை எட்டுவதாக பிரதேசசபைத் தலைவர் தெரிவித்தார். இதனையடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். (க-110)



வடமாகாண சபரிமலை யாத்திரிகர்கள் இணையத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மாநாடும் மகா குரு ரவிசுவாமியின் கௌரவிப்பும் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. வடமாகாண சபரிமலை யாத்திரிகர்கள் இணையத்தலைவர் தவத்திரு.தரணீஸ்வர குருசுவாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், குருசுவாமிகள் உள்ளிட்ட ஐயப்ப பக்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,113)





# இந்திய இசைக்கலைஞர்களின் 'குறளிசை காவியம் - 1330' வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.13

இந்தியாவின் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான இளம் இசைமேதை லிட்டியன் நாதஸ்வரம், அமிர்தவர்ஷினி ஆகியோரின் தயாரிப்பில் உருவான 'குறளிசைக் காவியம் 1330: இசைவழி பாகம் -2' வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர்.சுகன்யா அரவிந்தன், மகாகவி பாரதியாரின் கொள்ளுப்பேரன் நிரஞ்சன் பாரதி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை ஆற்றினர்.

தொடர்ந்து 1330 குறட்பாக்களும் இசையுடன் பாடி இசையுடன் பொருள் கூறி வெளியிடப்பட்டது.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1000 பாடகர்கள் குறளிசைக் காவியப் பாடல்களுக்குக் குரல் கொடுத்தனர்.

இலங்கையைச் சேர்ந்த 25 இளைய தலைமுறைப் பாடகர்களும் இதில் அடங்குவர்.

இதேவேளை1330 குறட்பாடல்களையும் பத்துப் பிரிவுகளாக்கிப் பத்து நாடுகளில் வெளியீடு செய்யவுள்ளனர். இதன் முதலாவது வெளியீடு கடந்த செப்ரெம்பர் மாதம் தமிழ்நாடு வள்ளுவர் கோட்டத்தில் பிரமாண்டமாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ஆய்வாளருமான பாக்கியநாதன் அகிலன் எழுதிய 'கொடியில் கிடந்து உலரும் புன்னகை' தமிழ், ஆங்கில கவிதை நூல் வெளியீட்டு விழா பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறையின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் நூல் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறையின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி.ம.திருவரங்கன் மற்றும் விரிவுரையாளர் தனுக பண்டார ஆகியோர் நூல் தொடர்பான ஆய்வுரைகளை ஆற்றினர்.

நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆய்வாளர் கீதா சுகுமாரன் சிறப்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து பேராசிரியர் ரகுராம் நூலை வெளியிட்டுவைக்க கலைமுகம் சஞ்சிகையின் ஆசிரியர் கி.செல்மர் எமில் சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சித்தா காஸ் நடன நிறுவனத்தின் இயக்குநரான இராசையா தனராஜின் போரில் உயிர்நீத்த ஆத்மாக்களின் அழுகுரலாக ஒலித்த காண்பியல் நடன நிகழ்வு அரங்கேறிச் சபையோரைப் பெரிதும் கவர்ந்தது. கவிதைப் புத்தகத்தில் இடம்பெற்ற சில கவிதைகளை கோபால கிருஷ்ணன் [illegible] பாடினார். (ச-25,66)

# ஆரம்ப சுகாதார நிலையம் பாண்டியன்குளத்தில் மூடல்

## பிரதேச மக்கள் அவதி

முல்லைத்தீவு, ஒக். 13

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின்கீழ் இயங்கும் பாண்டியன்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் முன்னறிவித்தலின்றி மூடப்பட்டுள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிகிச்சை நிலையம் இன்மையால் அங்கு பயன்பெற்று வந்த தாய்மார் பத்து கிலோமீற்றர் தூரம் கடந்து நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு செல்வதற்கும் ஒரேயொரு பேருந்து சேவை மட்டுமே நடைபெறுவதால் சிகிச்சையை பெற்றுக்கொள்வதில் தாய்மார் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் மாவட்ட தாய்சேய் நல மருத்துவ அதிகாரி, பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்குப் பலமுறை முறைப்பாடு செய்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மீண்டும் பாண்டியன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீளியக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டு நிகழ்வு

சட்டத்தரணியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா. சடகோபன் எழுதிய மலையக வரலாற்றைக் கூறும் 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் எழுநாவின் வெளியீடாக கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சின் பெருந் தோட்ட வீடமைப்பு பிரிவின் முன்னாள் செயலாளர் எம். வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலாசார அலுவல்கள் மற்றும் புத்த சாசன அமைச்சர் கலாநிதி ஹினிதும செனவி, சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் திருமதி ராஜலட்சுமி சேனாதிராஜா, செல்கொ கொன்டினெனாடல் தனியார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பி.எஸ். செல்வரட்ணம், நாவல் நகர் கதிரேசன் கோவில் அறங்காவலர் முத்தையா பிள்ளை ஶ்ரீகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரையை ஹேமச்சந்திரவும், நூல் அறிமுக உரையை கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகம் சு. முரளிதரனும் நிகழ்த்தினர். நூல் வெளியீட்டுக்கு இலக்கியப்புலவர் ஹாஸிம் உமர் முன்னிலை வகிக்க, நூலின் முதற்பிரதியை முத்தையா பிள்ளை ஶ்ரீகாந்தன் பெற்றுக்கொண்டார். நூலாய்வுரை யைப் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பெ. சரவணகுமார், கருத்துரைகளை மலையக ஆய்வாளர் இ. தம்பையா, ஊடகவியலாளர் நிவேதா ஜெகநாதன் ஆகியோர் வழங்கினர்.

(ச-25)

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலிப்பியர் 4:21



### விஜயச்சந்திரன் டினேஸ்

(சென் ஜோன்ஸ் கல்லூரி. 2013 வர்த்தகப் பிரிவு மாணவன்)

நிஜமானது
07.11.1993

நிழலானது
13.10.2012

என் செல்ல மகன் டினே

எம்மை விட்டு பிரிந்து பதின்மூன்று ஆண்டுகள் வெகு விரைவில் சென்று விட்டதையா?

பதின்மூன்று ஆண்டுகள் அல்ல நூற்றுமுப்பது ஆண்டுகள் சென்றாலும் உனை மறைக்க யாரும் இல்லை இவ்வுலகில்

என் செல்ல மகனே

குலம் விளங்கவென்று வந்த கோமகனே பலமிழந்து போனோமையா? ஆனாலும் நீர் தேடிய நல் மரியாதை எம்மை தலை நிமிர வைத்தாய் ஐயா?

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் என்ற பொய்யா மொழி புலவரின் வாக்கிற்கிணங்க உன் தாய் தந்தையை மகிழ்வில் ஆழ்த்தினாய்.

துன்பங்கள் எம்மை சூழ்ந்த போதும் நீர் வாழ்ந்த நாட்களில் நீர் எத்தனையோ நல்ல காரியங்கள் செய்ததை மற்றவர்கள் சொல்லும் போது இப்படித்தான் வாழ வேண்டும். என்று எடுத்துக் காட்டியுள்ளாய்.

நீர் நடந்த பாதையெல்லாம் நெருஞ்சி முள்ளாய் குத்துதையா!

மண்ணில் உன் ஜனிப்பு வீண் அல்ல விண்ணில் வேந்தனின் நற்செய்தி பூமியில் பறை சாற்றி ஓய்ந்த ஒலி பெருக்கி

குலம் செழிக்க வந்த கோமகனே எங்கு சென்றாய்? நீர் ஓய்வு எடுத்த போதும் ஓய்வின்றி ஒலிக்கும் நீர் கூறிய ஆண்டவரின் வார்த்தைகள் எம் செவிகளில் இனி

உன் தாய் உமை சுமந்த வலியை விட உன் பிரிவால் சுமக்கும் வலியை அறிவாயோ!

இம் மண்ணில் உம்மை பிரிந்தாலும் விண்ணில் உம்மைக் காண்போம் என்ற நம்பிக்கையில் மிகுதி நாட்களைக் கழிப்போம்

நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே

38/46, சிவன் புது வீதி,
மணல்தறை,
கந்தர்மடம்

என்றும் உன் நினைவுகளுடன்
பெற்றோர்

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
06 . 10 . 1981

இறப்பு
10 . 10 . 2020

அமரர்
### லிங்கோற்பவநாதர் ரவிசங்கர்


திதி : 13.10.2025

எமது குடும்பத்தின் ஆணிவேர்
எம்மை விட்டகன்று
ஆண்டுகள் ஐந்து கழிந்தும்
மனதிலும் நினைவிலும் வாழும்
எம்மவனை நினைவுகூரும்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 03 . 1966



இறப்பு
11 . 10 . 2025

### கதிரவேலு பாலச்சந்திரன்

மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு பாலச்சந்திரன் கடந்த 11.10.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு முத்துபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடேசபிள்ளை, காலஞ்சென்ற மனோன்மணி தேவி, பாலசிங்கம், காலஞ்சென்ற பூபாலசிங்கம், பாலசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2025) செவ்வாய்க் கிழமை முற்பகல் 8.30 மணிக்கு சிறுப்பிட்டி மேற்கில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
076 80 42 808

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
08 . 10 . 1950



இறப்பு
12 . 10 . 2025

### நாகநாதன் மகாநாதன்

(முன்னாள் கணித ஆசிரிய ஆலோசகர் - யாழ். வலயம் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான் - நல்லூர்.)

பிரம்படியைப் பிறப்பிடமாகவும் 393/16 கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதன் மகாநாதன் (மகான்) அவர்கள் நேற்று (12.10.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நாகநாதன் - மனோன்மணியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், வானதி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கதிரவேள்பிள்ளை - பூபதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சாம்பவி, சுமந்திரன் (இந்து), கௌரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஐங்கரன், ரஜிதா மற்றும் சிந்துமை ஆகியோரின் மாமனாரும், விஜயநாதன் (லண்டன்), காலஞ்சென்ற விஜயமலர் (மலர்), செல்வநாதன் (செல்வன் - UK), யோகநாதன் (யோகன் - UK), மாலினி (மாலா) மனோகரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுலோஜனா, செல்வராசா, இரத்னேஸ்வரி (இராசாத்தி - UK), ஜெயநந்தினி (நந்தினி - UK), விஜயேந்திரன், சுவர்ணா (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தா, வனஜா, கிரிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், ஆனந்தகுமார், மற்றும் மிஷேல் ஆகியோரின் சகலனும், அனுப்பிரியா, ஆராதனா, கயிலன், மற்றும் ருத்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, அன்னாரின் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

393/16, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 074 011 5365 - வானதி
076 284 1597 - கௌரங்கன்
0777 150 863 - சுமந்திரன் (இந்து)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 30584) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கிராமமட்ட சங்கங்களுக்கான ஊடக வலுப்படுத்தல் செயற்றிட்டம் மூளாயில் உள்ள காவேரி கலாமன்ற அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது மக்கள் ஊடகங்களுக்கு அச்சமின்றி கருத்துத் தெரிவிக்கும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டன. (சு-25, 27)

காணி விற்பனைக்கு

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

# உடன் விற்பனைக்கு

- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 10 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும் 16 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ் K.K.S வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 200 அடி அகலம், 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டு
- யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 220 அடி அகலமும் 240 அடி நீளமும் கொண்ட காணித்துண்டு
- யாழ் பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 230 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டு.
- யாழ் A9 வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
- மன்னார் Town இற்கு அண்மையில் அரிசியாலையும் உடன் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:

077 723 2535

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்.
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம், சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 03 சந்தை தெற்கு வீதி, ஆதன இலக்கம் 86ல் பிரதேச சபைப் பதிவேடுகளில் **திருமதி.எஸ்.யோகா பிலிப் உரிமைகோருபவர் எஸ்.டோன் பிலிப்** எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தினை **ஞானப்பிரகாசம் அற்புதமரியசீலன் பெண் அன்ரோய் மேரி பிறெண்டா** எனும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

**இவ்வாதனமானது பிரசித்த நொத்தாரிசு கேசவன் சஜந்தன் அவர்களால் 2012.03.10ஆம் திகதி 18ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சுன்னாகம் சந்தை தெற்கு வீதி சவிரிமுத்து செபரத்தினம் பெண் மரிய அருள்லீலி அவர்களால் ஞானப்பிரகாசம் அற்புதமரியசீலன் பெண் அன்ரோய் மேரி பிறெண்டா என்பவருக்கு அழியா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இது வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை, "தேவராணையும் அடிச்சேரியும்" நிலப்பரப்பு 01, குளி 06.75 கிணறும் வீடும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களின் 1928ஆம் இலக்க 2006.05.30ஆம் திகதிய படத்தில் முதலாம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகளாக கிழக்கு - தம்பையா யோகராசா பெண் புஷ்பதேவியின் ஆதனம், வடக்கு சண்முகம் கதிரவேலு பெண் நவநாயகியின் ஆதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலும் என உள்ளது.**

இவ்வுறுதியில் இதற்கு முட்பட்ட உறுதியாக 2006ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு குமாரசுவாமி விசுவலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 1547ஆம் இலக்கம் கொண்ட **வெளிப்படுத்தல் உறுதி** குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வெளிப்படுத்தல் உறுதி, யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தை தெற்கு வீதியைச் சேர்ந்த சவிரிமுத்து செபரத்தினம் மனைவி மரிய அருள்லீலி என்பவரால் "நான் அறிந்த அளவில் 1930ஆண்டுக்கு முன்னர் வயித்தி வல்லிபுரம் சொந்தக்காரராக இருந்து அவர் 1957ஆம் ஆண்டு இறக்க அவரின் உரிமைக்காரராக தொம்பிலிப்பு மனைவி சுவக்கின் சொந்தக்காரராக இருந்து பின் அவ இறக்க அவவின் மகன் தொம்பிலிப்பு செபமாலை உரிமைக்காரரும் சொந்தக்காரரும் ஆக இருந்து சொல்லப்பட்ட எனது தந்தையாகிய செபமாலை இறக்க எனக்கு வந்தடைந்த உரிமையும் சொந்தமும் ஆன இவ் ஆதனத்துக்கு கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேல் நானும் எனது முன் உரித்தாளரும் எவ்வித பிசகு தடையற்ற ஆட்சியிலும் உடமையிலும் இருந்து ஆட்சி உரிமை சட்டத்தின் பெறுபேறுகளின் படியும் உரிமைப்படியும் சொந்தக்காரராக இருந்துவருகிறோம். இவ்வாதனத்திற்கு எனது முன்னோர்களின் உறுதிகளோ பத்திரங்களோ என்னிடம் இல்லாமையாலும் அதைத் தேடி கண்டுகொள்ள எடுத்த முயற்சிகளில் அவ்வாதனத்தின் ஆவணங்கள் எனக்குக் கிடைக்கப்பெறாமையாலும், எனக்கோர் உறுதிப்பத்திரம் பிரதேச சபையில் பதியவும் மற்றும் இவ்வாதனத்தில் நான் இருக்கும வீட்டுத் திருத்தம் செய்யவும் காணிக்கந்தோரில் இவ்வாதனத்தைப் பதிவுசெய்யவும் தேவைப்படுவதனால் இவ்வெளிப்படுத்தல் உறுதி வெளிப்படுத்தப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாதனத்தை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலக ஆதன வரிப் பதிவேடுகளில் **ஞானப்பிரகாசம் அற்புதமரியசீலன் பெண் அன்ரோய் மேரி பிறெண்டா என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம்** செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் சட்டரீதியான உரிய ஆவணங்களுடன் **இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் எழுத்து மூலம் தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்** எனும் முகவரிக்கு அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஞானப்பிரகாசம் அற்புதமரியசீலன் பெண் அன்ரோய் மேரி பிறெண்டா எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் **இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய சட்ட ரீதியான பிசகுகள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பேற்கமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தி. பிரகாஷ்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(CS 59626) E




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்லப்பா சுவாமிகள் குருபூஜை நிகழ்வுகள்


யாழ்ப்பாணம், ஒக்.13

சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர்த் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூஜை நிகழ்வு சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வேலுப்பிள்ளை சிவகுருநாதன் தலைமையில் நல்லூரிலுள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. செல்லப்பா சுவாமிகளுக்கு அபிஷேகம் இடம்பெற்றதுடன் தொடர்ந்து திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் என்பன ஓதப்பட்டன.


நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகச் சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் ம.பாலகைலாசநாதக் குருக்கள் கலந்துகொண்டு 'சத்துருஜயம்' எனும் தலைப்பில் உரையாற்றினார். (ச-41-66)



வேலணைப் பிரதேச செயலக சிறுவர் தின விழா வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலாளர் த.அகிலன் கலந்துகொண்டார். (ச-25,9)



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையின் புதிய அதிபராக ஆறுமுகம் வினோதன் கடந்த புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார். பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய வ. ஜீவரத்தினம் அண்மையில் ஓய்வுபெற்றதையடுத்து மாகாணக்கல்வி திணைக்களத்தினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-25,9)



கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இலக்கிய மாதத்தை முன்னிட்டு நடத்திவரும் "கிழக்கின் சிறகுகள் 2025" மூன்று நாள் இலக்கிய நிகழ்ச்சியின் இரண்டாம் நாள் நிகழ்வு, திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகரவால் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது. (ச-25,50)

# வீட்டுத்தோட்ட வயல் விழா

பளை, ஒக்.13

பளை வேம்பொடுகேணி இந்திராபுரத்தில் வீட்டுத் தோட்டப் பயனாளியான சுவர்ணகுமார் என்பவரின் வீட்டுத்தோட்டத்தில் வயல் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவில் பிரதேசசபை உறுப்பினர்கள், பூங்கனியியல் பாடவிதான உத்தியோகத்தர், கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர், அலுவலக மறுவயற் பயிர்ச்செய்கை பாடவிதான உத்தியோகத்தர், கிளாலிப் பிரிவு விவசாயப் போதனாசிரியர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ,வீட்டுத்தோட்ட பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)






சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின் 333ஆவது புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் த.காண்டீபன் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றினர். இதேவேளை பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மூன்று பாடசாலை மாணவிகளுக்கு மொத்தமாக 1 இலட்சத்து 46 ஆயிரத்து 550 ரூபா பெறுமதியான மூன்று புதிய து[illegible] நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,66)

# மரண அறிவித்தல்



## கணபதிபிள்ளை கந்தையா

(முன்னால் கிளை முகாமையாளர் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவு சங்கம்)

கப்புதூ கரவெட்டியை சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (12.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிபிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - காமாட்சியம்மா (பொன்னம்மா) தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானாம்பிகை இன் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான ஞாணபூரணி (விதுசா), கேதீஸ்வரன் (விதுசன்) மற்றும் கணேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுணேஸ்வரி (சங்கானை பிரதேச செயலகம்), தர்சினி (ஆசிரியை புத்னர் டீசாமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வேணுகோபன், மதினி, அட்சயன், மதுனிகேதன் மற்றும் விஸ்வசாயி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் பொன்னாலையில் உள்ள மகனது வீட்டில் நடைபெற்று 11.00 மணியளவில் கப்புது சனசமூக நிலையத்தில் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கப்புது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொன்னாலை,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 435 4468, 077 389 1421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

முன்னாள் படை அதிகாரிகள் சிலருடன் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
17ஆம் திகதி காலை மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோர் எரிக் சொல்ஹெய்ம், சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதி, ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர். பயங்கரவாதிகளை சரணடைய வைப்பதற்குரிய வழிமுறை தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டுள்ளது. இதன்போதுதான் வெள்ளைக்கொடி ஏந்தி வருதல் உள்ளிட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளன.
எனினும், பயங்கரவாதிகளை முற்றாக ஒழிக்கவேண்டும் என்பதே எனது கட்டளையாக இருந்தது. ஏனெனில் சரணடைய வைத்திருந்தால் பிரபாகரனை மஹிந்த ராஜபக்ச முதலமைச்சர் ஆக்கி இருக்கக் கூடும். கே.பி., பிள்ளையான் ஆகியோர் தாலாட்டப்பட்டது போன்று நடந்திருக்கும். இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளர்களும் அறிந்திருந்தனர். என்னிடம் வீடியோவொன்று உள்ளது. அதை விரைவில் வெளியிடுவேன்.
17 ஆம் திகதி கோத்தாபய ராஜபக்ச, சவேந்திர சில்வாவுக்கு தொலைபேசி அழைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளார். அந்த அழைப்பை எடுத்து கதைத்த பின்னர் தொலைபேசியை சவேந்திர சில்வா வைத்துள்ளார். அவரைச் சூழ ஊடகங்களின் கமராக்கள் இருப்பதை அவர் மறந்திருந்தார். பாதுகாப்புச் செயலாளரே எனக்கு அழைப்பை ஏற்படுத்தினார், சரணடைவதற்கு வெள்ளைக்கொடி ஏந்தி வருவது பற்றி கலந்துரையாடப்பட்டது என அவர் கூறினார். நாம் எல்லோரையும் கொல்வோம் என்றெல்லாம் தனக்கு முன்னால் இருந்த அதிகாரிகளிடம் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.
ஊடகவியலாளர்கள் இவற்றை செவிமடுத்துக்கொண்டிருந்தனர். அந்தச் சம்பவத்தின் காணொலி என்னிடமும் உள்ளது. விரைவில் அதை வழங்குவேன்.
இவற்றை செவிமடுத்துக்கொண்டிருந்த ஊடகவியலாளர்கள்தான் வெள்ளைக் கொடி தொடர்பாகக் கதைத்தனர். 2010 ஜனாதிபதி தேர்தலின்போது பிரட்ரிக்கா ஜேம்ஸ் என்ற பத்திரிகை ஆசிரியர் என்னை நேர்காணல் செய்வதற்கு வந்திருந்தார். 'வெள்ளைக்கொடி ஏந்தி சூடு நடத்தும் கதை ஏதும் இருந்ததா?' என வினவினார்.
இது தொடர்பாக ஏற்கனவே இரு ஊடகவியலாளர்கள் என்னிடம் வினவினர் என்று மாத்திரமே நான் பதிலளித்திருந்தேன். இதை மட்டும்தான் நான் கூறினேன். ஆனால் வெள்ளைக்கொடி ஏந்தி வருபவர்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்துமாறு நான் கூறினேன் என அவர் செய்தி வெளியிட்டார். இது அப்பட்டமான பொய்யாகும். எனக்கு எதிராக சேறு பூசுவதற்காகவே வெள்ளைக்கொடி வழக்குப் பயன்படுத்தப் பட்டது - என்றார். (அ-எ-44)

## செம்மணிப்...

நிதி ஒதுக்கீட்டுக்கு இன்று அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்த வழக்கு கடந்த முதலாம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகளுக்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கோரிக்கைக்கு (பட்ஜெட்) அனுமதி வழங்கப்படவில்லை என்று நீதிமன்றில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதையடுத்து வழக்கு இன்று திகதியிடப்பட்டது.
அதேவேளை, செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் இந்தமாத முற்பகுதியில் கருத்துத் தெரிவித்திருந்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, செம்மணி மனிதப் புதைகுழியின் அடுத்த கட்ட அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் அலுவலக மட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், உரிய நடைமுறைகளை விரைவில் பூரணப்படுத்தி, தேவையான நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். (அ-எ-26)

## பொறுப்புக்கூறல்...

புக்கூறல் திட்டத்துக்கு நிதியளிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 3.8 மில்லியன் அமெரிக்க டொலரைக் கோரியுள்ளது.
திட்டச் செலவுகள், பயணச் செலவுகள், புதிய ஆட்சேர்ப்புகள், பயணங்களின்போது உள்ளூர் விளக்கம் தொடர்பான ஒப்பந்தச் சேவைகள், செயற்கைக்கோள் படம் பகுப்பாய்வு போன்றவற்றை ஈடுகட்டுவதாக இந்த நிதி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் இந்தத் திட்டம், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான எதிர்காலப் பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கு, ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையாகும். ஜெனிவாவைத் தளமாகக் கொண்ட இந்தப் பொறுப்புக்கூறல் திட்டம் 2021 இல் ஐக்கிய நாடுகள் பேரவையின் தீர்மானத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
கடந்த 6ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீதான புதிய தீர்மானம் கொண்டுவரப்பட்டதை அடுத்து, அந்தத் திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்தப் பொறிமுறையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. (அ-எ-இ)

## சங்குப்பிட்டி...

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.
கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.
சுமார் 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. ஆயினும் சடலம் அடையாளம்காணப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பூநகரி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-133-26)

## மாகாணத்...

பின்னர் அடுத்த வருடம் நடுப்பகுதியில் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அந்தப் பணியை விரைவுபடுத்தி தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்கமைய மார்ச் இறுதி வாரத்தில் தேர்தல் நடத்தப்படக்கூடும் எனவும், தேர்தல் திகதி பற்றிய முடிவை தேர்தல் ஆணைக்குழுவே எடுக்கும் எனவும் அறியமுடிகின்றது.
அரசாங்கம் தொடர்பாக விமர்சனங்கள் இருந்தாலும், அரசாங்கத்தை விட எதிர்கட்சிகளுக்கு அதிக நற்பெயர் கிட்டவில்லை என்பது அரசாங்கத்தின் மதிப்பீடு. அதனால் அதை உறுதிப்படுத்துவதற்கான கருத்துக் கணிப்பாக இந்தத் தேர்தலை பயன்படுத்த அரசாங்கம் திட்டமிடுகின்றது.
சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் முன்வைக்கப்பட்ட திட்டங்களின்படி, அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் அரசாங்கம் மிகவும் சிக்கலான, கடுமையான முடிவுகளை செயற்படுத்த வேண்டியுள்ளது. முக்கியமாக அரசாங்கம் பல அரசாங்க நிறுவனங்களை தனியார்மயமாக்கவும், சிலவற்றை மூடவும், அரசு செலவினங்களை வெகுவாகக் குறைக்கவும் கட்டாயப்படுத்தப்படும்.
இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்துவது தவிர்க்க முடியாமல் இருக்கும் என்பதுடன், மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பையும் தூண்டும் என்று அரசாங்கம் கருதுகின்றது. அதனால் மக்கள் ஆணையை நாடி பிடித்துப் பார்க்கும் வகையில் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது. (அ-எ-44)

## முப்படை...

கடற்படையினர் சுற்றுக்காவல் நடவடிக்கைகள் மூலம் கடல்வழியாகப் போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதை இயன்றளவு தடுக்கின்றனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பல நூறு கிலோ போதைப்பொருள்களும் கைப்பற்றப் பட்டுள்ளன. ஆயினும் இந்த நடவடிக்கைகளை முற்றாகக் கட்டுப்படுத்த விமானப் படை மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு அவசியம்.
இலங்கைக் கடற்படையால் தன்னிச்சையாக எந்த முடிவையும் எடுக்கமுடியாது. பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமையவே நடவடிக்கை எடுக்கமுடியும். பாதுகாப்பு அமைச்சு என்பதே அரசாங்கம். எமக்கான ஒத்துழைப்புக்கள் சமூக மட்டத்தில் இருந்தும் இராணுவம், விமானப்படை, பொலிஸார் என அனைத்து வழிகளிலும் கிடைத்தால் சட்டவிரோதச் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும். பொதுமக்களும் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்க முன்வர வேண்டும் - என்றார். (அ-எ-26)

## ஐந்தாம்...

அளவீடுகளுக்கு இணங்க, 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டும். அத்துடன் கடன் மறு சீரமைப்பில் போதுமான முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு பல தரப்பு பங்காளிகளின் நிதிப் பங்களிப்புக்கள் பாதுகாக்கப்படுவதையும், நிதி உத்தரவாதங்களின் மதிப்பாய்வு நிறைவடைவதையும் இலங்கை உறுதிப்படுத்த வேண்டும்.
இந்த இரு நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்ட பின்னரே நிறைவேற்றுக்குழுவின் ஒப்புதலுக்காக ஐந்தாவது கடன் தவணைக்கான மதிப்பாய்வு சமர்பிக்கப்படும். நிறைவேற்றுக் குழுவின் ஒப்புதல் கிடைத்த பின்னர் இலங்கைக்கு 347 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும். அதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் கீழ் இலங்கை பெறும் மொத்த நிதி உதவி சுமார் 2.04 பில்லியன் அமெரிக்க டொலராக உயரும்.
சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் நிலையான பாதையில் சென்றாலும், 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நிறைவேற்றுவது அரசாங்கத்துக்குக் கடும் சவால்களை ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்படுகின்றது. எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவுள்ளது.
அதேநேரம், கடன்மறுசீரமைப்புப் பேச்சுகளை விரைவாக முடித்து நிதி உத்தரவாதங்களை உறுதிப்படுத்துவது சர்வதேச பங்காளிகளிடம் தங்கியுள்ள மிகக் கடினமான இராஜதந்திரப் பணியாகும். ஆயினும் இந்த இரு நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதே இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அடுத்த கட்டத்துக்கு அவசியமானதாகும். (அ-எ-இ)

## குரல்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பொன்சேகாவின் இயல்பு அது. முன்னரும் அவர் அப்படிதான். குரல் பதிவு இருந்தால் அதனை அவர் வெளியிடட்டும். அதற்குரிய உரிமை அவருக்கு உள்ளது. கோத்தாபய ராஜபக்ச, பொன்சேகாவுடன் நம்பி கதைத்திருக்கக்கூடும். ஆக அதை வெளியிட்டால் தற்போது பொன்சேகாவை நம்புபவர்களின் நிலை என்னவென்று சொல்வது? - என்றார். (அ-எ-44)

## மீனவர்...

திடம் ஒப்படைப்பதுடன் எமது கடமை முடிந்துவிடும் - இவ்வாறு வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் புத்திக லியனகமகே தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக் கடற்படைமுகாமில் கடற்படையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவது சவாலான விடயம். கடற்படைப் படகுகளுக்கு அதிகளவு எரிபொருள் தேவை. அதனால் எரிபொருள் சிக்கல்களை எதிர்கொள்கின்றோம்.
கடற்படையினர் ஒரு டோறா படகில் சென்றால், இந்திய மீனவர்கள் 50, 100 படகுகளில் பெருமெடுப்பில் வருகின்றனர். கடற்படைப் படகைக் கண்டதும் இந்தியக் கடல் எல்லைக்குள் திரும்பிச் செல்கின்றனர். எம்மால் துரத்திப்பிடிக்க முடிந்தளவு எல்லைதாண்டும் மீனவர்களைக் கைது செய்கின்றோம், படகுகளையும் கைப்பற்றுகின்றோம். எங்களால் கைது செய்ய மட்டுமே முடியும்.
அதேபோன்று உள்ளூர் மீனவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் கடற்படையால் மேற்கொள்ளப்படுகின்றன். உள்ளூர் மீனவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தனியே கடற்படையால் மட்டும் தடுக்க முடியாது. அதற்கு மக்களின் ஒத்துழைப்பும் தேவை. சமூகத்தில் இருந்து தகவல்கள் கிடைக்கவேண்டும். அவ்வாறு கிடைத்தால் கடற்படையினர் நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்கள் - என்றார். (அ-எ-26)

## வெடிப்புச்...

எறிகணை ஒன்றில் இருந்து வெடிமருந்தைப் பிரித்தெடுக்க முயன்றபோது, அது வெடித்ததில் கொடிகாமத்தைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் உறவினர்களாவர்.
படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (அ-எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் போர்நிறுத்தம்: இறுதி உச்சிமாநாடு இன்று



## ட்ரம்ப் பங்கேற்கின்றார்

கெய்ரோ, ஒக். 13

**காஸாவில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், எகிப்திய அதிபர் அல் சிசி ஆகியோரின் தலைமையில் இன்று உச்சிமாநாடு நடைபெறவுள்ளது.**

காஸாவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு ஹமாஸ் அமைப்பும், இஸ்ரேலும் இணக்கம் தெரிவித்துள்ளன. இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்றநிலையில், இதன் இறுதிக்கட்ட மாநாடு எகிப்தில் இன்று நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டிலேயே, அதிபர் ட்ரம்ப் கலந்துகொள்ளவுள்ளமை உறுதியாகியுள்ளது. ட்ரம்பைத் தவிர, மேலும் பல உலகத் தலைவர்களும் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். இதன்படி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் குட்டரஸ், பிரிட்டனின் பிரதமர் ஸ்டார்மர், இத்தாலியப் பிரதமர் ஜோர்ஜியா மெலோனி, ஸ்பெயினின் சான்சிலர் பெட்ரோ சான்செஸ், பிரான்ஸின் அதிபர் மக்ரோன் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு, மாநாட்டில் கலந்துகொள்வாரா இல்லையா என்பது தொடர்பில் தகவல்கள்வெளியாகவில்லை. ஆனால், ஹமாஸ் அமைப்பு பங்கேற்காது எனத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## முற்றோதல்

யாழ்ப்பாணம், ஒக்.13

கொக்குவில் தென்னாடு சிவமடத்தில் எதிர்வரும்25ஆம் திகதி சனிக்கிழமைமுதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் காலை 8 மணி முதல் நண்பகல்12 மணி வரை பெரியபுராணம் முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. பங்குபற்ற விரும்பும் அனைத்து அடியவர்களையும் இணைந்துகொள்ளுமாறு தென்னாடு சிவமட நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (க-66)



வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார விளையாட்டு நிகழ்வு, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக சனசமூக நிலையங்களுக்கு இடையிலான போட்டிகள் நடைபெற்றன. (க-66)

## யாழ். மாவட்ட பெண்கள் அணி உதைபந்தாட்டத்தில் சாதனை



யாழ்ப்பாணம், ஒக்.13

பெண்கள் உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணம்மாவட்ட அணி முதன்முறையாக (பாடசாலை மட்டம் தவிர்த்து) தேசிய போட்டியொன்றில் வெற்றியீட்டியுள்ளது.

35ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டப் போட்டிகள் பதுளையில் நடைபெற்றது. அதில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி காலிறுதியில் அநுராதபுரத்தையும், அரையிறுதியில் களுத்துறையையும் வெற்றிகொண்டு இறுதிப்போட்டியில் பல தேசிய வீரர்களை உள்ளடக்கிய குருணாகல் மாவட்ட அணியை வென்று சாதனை படைத்துள்ளது.

இந்த அணியில் 14 வீராங்கனைகள் மகாஜனக் கல்லூரி மாணவிகள், இருவர் இருவர் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளாவர். அணிக்கான பயிற்சிகளை சாந்தன் வழங்கியிருந்தார். (எ-இ)

## உங்கள் பிள்ளைகளுக்குப் பழக்காதீர்கள்




பருத்தித்துறை கரணவாய் பிட்டி மூலைப் பகுதியில் உள்ள வீதியோரத்தில் விஷமிகளால் தொடர்ச்சியாகக் குப்பைகள் கொட்டப்பட்டதையடுத்து, சமூகச் செயற்பாட்டாளர் ஒருவரால் இந்தப் பதாகை வைக்கப்பட்டுள்ளது. 'இதை உங்கள் பிள்ளைகளுக்குப் பழக்காதீர்கள்' என்று அந்தப் பதாகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ் சங்கானையில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

**2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 1 பரப்பின் விலை 10 லட்சம்**

- 16 அடி பாதையுடன்
- சங்கானை மரக்கறி சந்தைக்கு அருகாமையில் உள்ள வீதியில்
- செபஸ்ரியார் கோவில் வீதி - ஓடக்கரை வீதி
- சங்கானை நகர சந்தை பஸ் நிலையம் 400m தூரம்
- நல்ல குடியிருப்பு சூழல் செம்மண் தரை

**பார்வையிடும் நேரம்**

காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:-

076 860 2770, 076 987 8617

(C5/30583)




தென்மராட்சிப் பிரதேச சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் சிறுகைத்தொழிலில் ஈடுபடுகின்ற சாவகச்சேரி நகர்ப்பிரிவு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான கணக்குப் பதிவுசெய்யும் பயிற்சி நெறி அண்மையில் நடத்தப்பட்டது. (ச-25,9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.